# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தொல்பொருள் (திருத்தச்) சட்டம்

---

(1998. மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1998. மே மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 12.75** **தபாற் செலவு: ரூபா 3.75**

# 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தொல்பொருள் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 29/ 96

## தொல்பொருள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, தொல்பொருள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சுருக்கப்பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொல்பொருள் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப்பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப் பெயர் இடப்படுகின்றது :—

188 ஆம் அத்தியாயத்தின் விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.

"இலங்கையின் தொல்பொருள்களையும், இலங்கையில் வரலாற்று அல்லது புதைபொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்களையும் கட்டிடங்களையும் சிறந்த முறையில் பாதுகாத்துப் பேணுவதற்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு கட்டளைச் சட்டம்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் "அல்லது ஏரியில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏரியில் அல்லது இலங்கையின் ஆள்புலக் கடலெல்லைக்குள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகள் இடப்படுகின்றன என்பதுடன், அவை 15அ, 15ஆ, 15இ மற்றும் 15ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 15அ, 15ஆ, 15இ மற்றும் 15ஈ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

2-டீ- 047390- 1,100 (98/04)

"தொல்பொருட்களைத் திருடுதல், அழித்தல் தொடர்பான தவறுகள்

தொல்பொருட்களின் திருட்டுத் தொடர்பான தவறுகள்.

15அ. வேறு எவரேனும் ஆளின் உடைமையில் இருக்கும் தொல்பொருள் தொடர்பில் தண்டனைச் சட்டக்கோவையின் 366 ஆம் பிரிவின் கருத்தெல்லைக்குள் வரும் திருட்டைப் புரிகின்ற ஆளெவரும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்குக் குறையாத அத்துடன் ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது, அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தொல்பொருளை அழித்தல், முதலியனவற்றுக்கான தண்டம்.

15ஆ. ஏதேனும் தொல்பொருளை வேண்டுமென்றே அழிக்கின்ற, அதற்கு ஊறுவிளைவிக்கின்ற, அதை உருவழிக்கின்ற அல்லது தீண்டுகின்ற அல்லது அதன் ஏதேனும் பாகத்தை வேண்டுமென்றே சேதப்படுத்துகின்ற ஆள் எவரும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்குக் குறையாத அத்துடன் ஐந்தாண்டுகளை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறுகள் பிணை வழங்கப்படத் தகாதனவாதல் வேண்டும்.

15இ. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அல்லது எழுத்திலான வேறு ஏதும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றம் பகரப்பட்டுள்ள அல்லது குற்றம் சுமத்தப்பட்ட ஆள் எவரும் பிணையில் விடுவிக்கப்படுதலாகாது.

சான்று.

15ஈ. இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கொன்றில், சான்றிதழில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பொருள் ஒரு தொல்பொருள் என்னும் பயன்படவும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்டதாகவும் கொள்ளப்படும் சான்றிதழொன்று, மேற்கொண்டும் எண்பிப்பு இல்லாமல் சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன், அதில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு முதற்றோற்றச் சான்றாதலும் வேண்டும்.".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "1850 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதிக்கு முந்திய காலப்பகுதியிலிருந்து இருக்கின்ற அல்லது அவ்வாறு இருந்ததாக நம்பப்படுகின்ற குறித்துரைக்கப்பட்ட சின்னம் எதுவும்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "நூறு ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு இருந்திருக்கின்ற அல்லது அவ்வாறு இருந்திருப்பதாக நம்பப்படுகின்ற சின்னம் எதுவும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் ஓரக்குறிப்பில், "1850 ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் இருந்ததான சின்னம்" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "நூறு ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதிக்கு இருந்திருக்கின்ற சின்னம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு, "நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்குக் குறையாத தும் அத்துடன் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, "நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் எது எப்படியிருப்பினும் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் அத்துடன் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்த கைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் Vஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

8. பின்வரும் புதிய பாகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் V ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் Vஅ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :–

## "பாகம் Vஅ

## ஆலோசனைக்குழு

ஆலோசனைக் குழுவைத் தாபித்தல்.

39அ. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப் படும் கட்டளை மூலம் (இதனகத்துப்பின்னர் "ஆலோசனைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப் படும்) புதைபொருளியல் ஆலோசனைக்குழு வொன்றைத் தாபிக்கலாம்.

(2) (அ) இக்கட்டளைச் சட்டத்தின் கோட்பாடு களையும் ஏற்பாடுகளையும் நிறை வேற்றுவதற்கு அல்லது அவற்றுக்கு பயன் கொடுப்பதற்கு அவசியமான தென அமைச்சர் கருதுகின்ற எவை யேனும் அல்லது எல்லாக் கருமங் கள் மீதும் ; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் தமது கடமைகளைப் புரிவது தொடர்பான விடயங்கள் மீது ஆலோசனை கேட்கப்படுகின்றவிடத்து,

பணிப்பாளர் தலைமையதிபதிக்கு ஆலோசனை வழங்குவது அத்தகைய ஆலோசனைக்குழுவின் பணியாதல் வேண்டும்.

(3) அமைச்சர், அத்தகைய ஆலோசனைக் குழுவுக்கு அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களை, அவர் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய நியதி, நிபந்தனைகளின் மேல் நியமிக்கலாம்.

(4) ஆலோசனைக்குழு, அதன் கூட்டங்களில் கூட்ட நடப்பெண்ணை ஏற்படுத்த அவசியமான உறுப்பினர் எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற் கான தத்துவம் உட்பட அதன் நடவடிக்கை முறையை நிர்ணயிப்பதற்கும் ஒழுங்குபடுத்து வதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆலோசனைக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும், அவர் முன்னரே பதவியி லிருந்து விலகினாலொழிய, இறந்தாலொழிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டா லொழிய இரண்டாண்டுகளுக்குப் பதவி வகித் தல் வேண்டும்.

(5) ஆலோசனைக்குழுவின் ஓர் உறுப்பினர், அமைச்சருக்கு முகவரியிடப்படும் கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(6) பதவி விலகுதல் மூலம் அல்லது பதவிக்காலம் முடிவடைவதன்மீது தமது பதவியை வறிதாக்குகின்ற ஓர் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(7) ஆலோசனைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், சுகவீனம் அல்லது உடற்பலவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக வருமிடத்து, அமைச்சர் அவரது இடத்திற்குப் பதிற்கடமையாற்றுவதற்கு வேறு ஆளை நியமிக்கலாம்.

(8) அமைச்சரானவர், ஆலோசனைக்குழுவின் எவரேனுமுறுப்பினரைப் பதவியினின்றும் அகற்றுதல் உசிதமானதெனக் கருதினால், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அவர் அவ்வாறு செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் VI ஐ உடனடுத்துப் பின்னர் காணப்படும் தலைப்பை மாற்றீடு செய்தல்.

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவுக்கு உடன் முன்னர் பாகம் VI இல் காணப்படும் தலைப்பு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவது இடப்படுகிறது :—

"புதைபொருளியல் பணிப்பாளர் தலைமை அதிபதியின் தத்துவங்களும் கடமைகளும்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 40 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :—

"புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையாதிபதியின் தத்துவங்கள்.

40. புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதியானவர் :

(அ) தேசிய புதைபொருளியல் கொள்கையொன்றை வகுத்தமைக்கு அரசாங்கத்தினால் அது அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அத்தகைய கொள்கையை கூட்டிணைந்து நடைமுறைப்படுத்துவதற்கும் ;

(ஆ) இலங்கையின் புதைபொருள் மரபுரிமைச் சொத்துக்களைப் பட்டியலிடுவதற்கும் ;

(இ) அத்தகைய புதைபொருளியல் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் ;

(ஈ) இலங்கையின் புதைபொருளியல் மரபுரிமைச் சொத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் விசேடமாக வரலாற்று முற்கால, வரலாற்றுப் பூர்வீககால, வரலாற்று ஆரம்பகால, வரலாற்றிடைக்கால, வரலாற்றுப் பிற்கால மேலும் பொது அல்லது குறிப்பிடப்பட்ட கோட்பாடு, முறைமை அத்துடன் நடைமுறை பற்றி ஆராய்ச்சியை நடாத்துவதற்கும் ;

(உ) புதைபொருளியல் மரபுரிமைச் சொத்துப் பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை தொல்பொருட்களின் பொருத்தமான வெளிக்காட்டல்கள், வெளியீடுகள் அத்துடன் வேறு வழிகளில் மேம்படுத்துவதற்கும் ;

(ஊ) அவசியமெனக் கருதுகின்றவிடத்து, தெரிவு செய்யப்பட்ட அமைவிடங்களில் அல்லது பார்வையாளர் நிலையங்களில் ஒரு நுழைவுக் கட்டணத்தை விதிப்பதற்கும் ;

(எ) அரசாங்கம் அல்லது வேறு எவரேனும் ஆளினால் உத்தேசிக்கப்படும் அபிவிருத்தி, கைத்தொழில் அல்லது வேறு கருத்திட்டங்களினால் பாதிக்கப்படக் கூடிய இடப்பிரதேசத்தின் புதைபொருளியல் தாக்கத்தின் மதிப்பீட்டை நடாத்துவதற்குத் தேவைப்படுகின்றவாறான ஏதேனும் தாக்கத் தணிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும்

இத்தால் தத்துவமளிக்கப்படுகின்றார்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்காகப் பின்வரும் பிரிவு இடப்படுகிறது :-

"பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அரசாங்க அதிபர்களுக்கும் வேறு அலுவலர்களுக்கும் அதிகாரமளிப்பு.

43. (1) புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதியானவர் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் அவரின் தத்துவங்கள், கடமைகள் அல்லது பணிகளில் எதனையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு பின்வருவோருக்கு பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கலாம் :—

(அ) அரசாங்க அதிபர் அல்லது முறையே அந்த மாவட்டத்தினுள் அல்லது பெரும்பாகத்தினுள் ஒரு மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் அல்லது ஏதேனும் பெரும்பாகத்தின் பிரதேசச் செயலாளர் ;

(ஆ) குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் அல்லது மாகாணத்தில் எவரேனும் புதைபொருளியல் திணைக்களத்தின் அலுவலர் ; அல்லது

(இ) அத்தகைய அதிகாரமளிப்பில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது அத்தகைய இடப்பரப்புகளிலும், சின்னங்களையும், தொல்பொருள்களையும் ஆராய்தலில், அகழ்வதில், பேணிக்காத்தலில் அல்லது அத்துடன் புனரமைத்தலில் அல்லது அவற்றிற்காக பராமரித்தலில் சிறப்பான தேர்ச்சி நிபுணத்துவம், மூலவளங்களைக் கொண்டுள்ள எவரேனும் ஆள் :

ஆயின், அதன் நோக்கமும், குறிக்கோள்களும் திருப்திகரமாக நிறைவேற்றப்படவில்லையென பணிப்பாளர் தலைமையதிபதி கருதினால் அத்தகைய அதிகாரத்தை அவர் எந்நேரத்திலும் நீக்கலாம் அல்லது மீளப்பெறலாம்.

(2) அதிகாரமளித்தலானது ஏனையவற்றுக்கிடையில் அதிகாரமளிப்பதற்கான குறிக்கோள்கள், புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர்கள் மேற்பார்வை செய்யும்முறை, கையாளப்படும் நடவடிக்கைமுறையைப் பதிவுசெய்தல், முன்னேற்றத்தை அறிக்கை செய்தல், அறிக்கைகளை எழுதுதல் என்பவற்றையும் குறித்துரைத்து எழுத்திலிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கு 43அ அத்துடன் 43ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**12.** பின்வரும் புதிய பிரிவுகள் 43 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகிறது என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் 43அ, 43ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதல் வேண்டும்.

"உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டத்தினது தாக்க மதிப்பீடு.

43அ. (1) 40ஆ என்னும் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட பட்டியலினுள் அமைகின்ற ஏதேனும் காணியின் அல்லது விதித்துரைக்கப்படக்கூடிய ஏதேனும் காணியின் பயன்பாட்டை, ஆக்கிரமிப்பை அல்லது அமிழ்வை விளைவாகக் கொண்ட ஏதேனும் அபிவிருத்தி அல்லது கைத்தொழில் செயற்றிட்டம் அல்லது கருத்திட்டம்

அரசாங்கத்தினால் அல்லது வேறு நிறுவனத்தினால் அல்லது ஆளினால் உத்தேசிக்கப்பட்டுள்ளபோது அத்தகைய செயல்திட்டத்தை அல்லது கருத்திட்டத்தைச் செயற்படுத்துதல் அத்தகைய காணியின்மீது அல்லது அதனுள்ளிருக்கும் தொல்பொருள்மீது ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தைப்பற்றிப் புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தபின்னர் அன்றி அத்தகைய செயற்றிட்டம் அல்லது கருத்திட்டம் அங்கீகரிக்கப் படவோ அல்லது அனுமதிக்கப்படவோ ஆகாது.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், தொல்பொருள் வரலாற்று அல்லது புதைபொருளியல் அம்சம்மீது அல்லது கேள்விக்குட்பட்ட காணியின் பெறுமதிமீது அல்லது அதன் மீதான ஏதேனும் தொல்பொருள்மீது ஏற்படும் விளைவுகளை மதிப்பீடு செய்ய அத்தகைய கருத்திட்டம் அல்லது செயல்திட்டப் பொறுப்பாளரின் செலவில் தாக்கமதிப்பீட்டளவொன்றை மேற்கொள்ளச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன் (எச்சந்தர்ப்பத்திலும் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் அத்தகைய மதிப்பீட்டளவுச் செலவை வைப்பிலிட்டதில் இருந்து ஆறு வாரங்களுக்குப் பிந்தாமல்) இணங்கப்பட்டவாறான அத்தகைய காலத்தினுள் அமைச்சருக்கு, உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டம் அல்லது செயற்றிட்டத்தை விதப்புரை செய்து, அதற்கு மறுப்புத் தெரிவித்து அல்லது அறிக்கையில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகள் அல்லது திரிபுகளுக்கு அமைவாக விதப்புரை செய்து, அத்துடன் கருத்திட்டப் பொறுப்பாளரின் செலவில் எவையேனும் தொல்பொருட்களைப் பாதுகாக்க, பேணிக்காக்க, அகழ்ந்தெடுக்க, ஆவணப்படுத்தி வெளியிட அத்துடன் அவசியமாயின் இடம் பெயர்ந்தமைக்கு ஆன அத்தகைய மேலதிகச் செலவின் மதிப்பீடொன்றுடன்கூடிய அவரது எழுத்திலான அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவில் குறிப்பிட்டவாறு அத்தகைய ஒவ்வொரு செயல்திட்டம் அல்லது கருத்திட்டத்தினது பொறுப்பாளர் இப்பிரிவில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காகவும், குறிக்கோள்களுக்காகவும் அதன் மொத்தச் செலவின் ஒரு வீதத்திற்கு விஞ்சாத ஒரு தொகையை ஏற்பாடு செய்து ஒதுக்கிவைத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் சட்டத்திலுள்ளது முரணாக எது எவ்வாறிருப்பினும், பயனுடையதாதல் வேண்டும்.

இணங்கியொழுகப்படவேண்டிய நிபந்தனைகள்.

43ஆ. (1) ஏதேனும் திட்டத்திற்கு அல்லது கருத்திட்டத்திற்கு ஏதேனும் நிபந்தனை அல்லது திரிபுக்கமைவாக அங்கீகாரம் அல்லது அனுமதி வழங்கப்பட்டிருக்குமிடத்து அதற்கு இணங்கியொழுகுதல் பொறுப்பாளரின் கடமையாதல் வேண்டும். ஏதேனும் நிபந்தனை அல்லது திரிபுக்கு இணங்கியொழுகத் தவறுதல் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் தவறொன்றாக வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய செயல்திட்டத்தை அல்லது கருத்திட்டத்தை உடனடியாக நிறுத்தவும் செய்விக்கலாம்.

(2) ஒரு செயல்திட்டம் அல்லது கருத்திட்டம் அவ்வாறு நிறுத்தப்படுமிடத்து, அத்தகைய செயல்திட்டம் அல்லது கருத்திட்டத்தின்மீதான வேலை, எந்த நிபந்தனை அல்லது திரிபுகளுக்கு அமைவாக அங்கீகாரம் அல்லது அனுமதி வழங்கப்பட்டதோ அந்த நிபந்தனை அல்லது திரிபு பொறுப்பாளரால் போதியளவு இணங்கியொழுகப்பட்டு பணிப்பாளர் தலைமையதிபதியிடமிருந்து அதன் சார்பில் ஒரு எழுத்திலான அனுமதி பெறப்படும்வரை, ஆரம்பிக்கப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது "நூறு ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு பின்வரும் பிரிவானது அதற்குப் பதிலீடு செய்யப்படுகின்றது :—

"வெகுமதி நிதியம்.

46. (1) புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டுப்பாட்டின்கீழும் நிருவாகத்தின்கீழும், சட்டவிரோதமாக தமது டைமையாக்கப்பட்ட தொல்பொருட்களை மீட்டெடுப்பதற்கு அல்லது அமைவிடங்களையும் தொல்பொருட்களையும் பாதுகாப்பதற்கு உதவும் தகவல்தருவோருக்கும் நிறைவேற்று அலுவலர்களுக்கும் வெகுமதி கொடுக்கும் நோக்கத்திற்காக (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "தொல்பொருள் வெகுமதி நிதியம்" என அறியப்படவேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தில் பின்வருவன வரவுவைக்கப்படல் வேண்டும் :—

(அ) இக்கட்டளைச் சட்டத்தின் கீழான தவறுகளுக்கான குற்றத்தீர்ப்புகள் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அறவிடப்படும் எல்லாக் குற்றப்பணங்களினதும் அரைப்பங்கு ;

(ஆ) தனியாட்கள், சங்கங்கள் அல்லது நிறுவனங்களிடமிருந்து நிதியத்திற்கான நன்கொடைகள் ;

(இ) வேறேதேனும் விதித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி நிதியத்தை வருடாந்தம் கணக்காய்வு செய்தல் வேண்டும்.".

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(அ) அவ்வுட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியை அதன் (ஔ) எனும் பந்தியாக மீள எழுத்திடுவதன் மூலம் ;

(ஆ) பந்தி (ஐ) இன் இறுதியில் காணப்படும் "அத்துடன்" எனும் சொல்லை நீக்கிவிடுவதன்மூலம் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் பந்தி (ஐ) இனை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் ;

"(ஒ) நிதியத்திலிருந்து வெகுமதிகள் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய முறை தீர்மானிக்கப் படுதல் வேண்டும் ;

(ஓ) நிதியத்தின் நிருவாகம் ; அத்துடன்".

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "தொல்பொருள்" எனும் சொல்லின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின் வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலம் —

"புதைபொருளியல் பாரம்பரியம்" என்பது மனிதவர்க்கத்தின் திட மரபுச் சொத்தின் எப்பாகம் தொடர்பாக புதைபொருளியல் வழிமுறைகள் பூர்வீக தகவல்களைக் கொடுக்கின்றதோ அப்பாகம் எனப் பொருளாவதுடன், மனிதன் உயிர் வாழ்ந்தமைக்கான சகல தடயங்களையும் எல்லா மனித செயற்பாட்டையும் வெளிப்படுத்துவது தொடர்பான இடங்களையும் கைவிடப்பட்ட கட்டமைப்புகளையும் (நிலத்துக்குக் கீழான மற்றும் அடி நீர்ப்பரப்பு அமைவிடங்கள் உட்பட) எல்லா வகையான எஞ்சு பொருட்களையும் அவற்றோடு உறவுபட்ட காலத்தகு கலாசாரப் பொருள்கள் எல்லாவற்றுடனும் சேர்ந்த பொருட்கள் யாவற்றையும் உள்ளடக்கும்."

(2) "சின்னம்" என்ற சொல்லின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்காக பின்வருவதைப் பதிலிடுவதன் மூலமும் :—

"சின்னம்" என்பது வரலாற்றுக்கால அல்லது வரலாற்று முற்கால மனித குடியிருப்பின் அல்லது செயற்பாட்டின் திட எஞ்சுபொருட்கள் காணப்படக்கூடிய ஏதேனும் கட்டடம் அல்லது வேறு கட்டமைப்பு அல்லது அமைப்பு அல்லது ஏதேனும் கல்லறை, புதைகுழி அல்லது வேறு இடுகாடு அல்லது அதே தன்மைத்தான வேறு அசைவற்ற ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம் அல்லது எஞ்சுபொருள் அல்லது வேறேதேனும் அமைவிடம் என்று பொருளாகும் என்பதுடன், ஏதேனும் சின்னத்தின் அமைவிடத்தையும் ஏதேனும் சின்னத்தைச் சுற்றி வேலியடைப்பதற்கு அல்லது மூடுவதற்கு அல்லது வேறுவகையாகப் பாதுகாப்பதற்கு தேவைப்படக்கூடியவாறு அத்தகைய அமைவிடத்திற்கு சமீபமாகவுள்ள நிலத்தின் அத்தகைய பாகத்தையும் உள்ளடக்கும்.

(3) "ஒழுங்குவிதி" எனும் சொல்லின் வரைவிலக்கணத்தை நேரே உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன்மூலம் :—

"ஆள்புல கடற்பரப்புகள்" என்பது 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க கரையோர வலயங்கள் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தின்மூலம் இலங்கையின் ஆள்புல கடற்பரப்புகள் என வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்புகள் என்று பொருளாகும்.

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏதேனும் ஏற்பாடுகளில் "புதைபொருளியல் ஆணையாளர்" எனும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம், "புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி" எனும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் செயற்பாடுகளின் பொது வான திருத்தம்.

**18.** முதன்மைச் சட்டவாக்கம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அல்லது அத்தகைய எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட, ஆக்கப்பட்ட, தேவைப் படுத்தப்பட்ட அல்லது வேறு வகையிலான ஏதேனும் அறிவித்தலின், சான்றிதழின், தொடர்பாடலின் படிவத்தின் அல்லது வேறு ஆவணத்தின் ஏதேனும் ஏற்பாட்டில், இச்சட்டம் தொடங்குதவதற்கு முன்னர் பிரதான சட்டவாக்கத்தின் கீழ நியமிக்கப்பட்ட புதைபொருளியல் ஆணையாளரைக் குறிக்கும், "புதைபொருளியல் ஆணையாளர்" எனும் சொற்கள் ஏற்படுகின்றவிடத்தெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி" எனும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

எழுத்திலான வேறு சட்டத்தைத் திருத்துதல்.

**19.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் புதைபொருளியல் ஆணையாளர் என்ற தன்மையில் முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் நியமிக்கப்பட்ட புதைபொருளியல் ஆணையாளரினால் அல்லது அவரின் சார்பாக ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எத்தன்மைத் தானதாயுமான ஒவ்வோர் ஒப்பந்தமும் உடன்படிக்கையும் அல்லது வேறு ஆவணமும் அல்லது சாதனமும் அத்தேதி யன்றும், அதன் பின்னரும் புதைபொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் அல்லது அவர் சார்பாகவும் ஆக்கப்பட்டதாகவும், வழங்கப்பட்டதாகவும் அல்லது நிறை வேற்றப்பட்டதாகவும் அத்துடன் ஆக்கப்பட்டிருப்பதாகவும், வழங்கப்பட்டிருப்பதாகவும் அல்லது நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தங்களைப் பேணுதல்.

**20.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.